செய்தி வெளியீடு எண். 65 நாள்: 30.01.2018

# மகாத்மாகாந்தி நினைவு தினத்தையொட்டி ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆலாடு ஊராட்சி, உத்தண்டி கண்டிகை கிராமத்தில் மகாத்மாகாந்தி நினைவு தினத்தையொட்டி ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.01.2018) நடைபெற்றது.

முன்னதாக, தொழுநோய் விழிப்புணர்வு பேச்சு மற்றும் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் கிராம சபை உறுப்பினர்கள் மற்றும் திரளான பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

மகாத்மாகாந்தி அவர்களின் நினைவு தினமான இன்று தொழுநோய் முற்றிலுமாக ஒழிப்பது குறித்த விழிப்புணர்வு சிறப்பு கிராம சபை கூட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டு வருகிறது. தொழுநோய் குறித்த ஆரம்ப அறிகுறி சிவந்த அல்லது வெளிர்ந்த உணர்ச்சியற்ற தேமல் தொழுநோயின் அறிகுறியாகும். ஆரம்ப நிலையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் ஊனத்தை தடுக்கலாம். மைக்கோபாக்டிரியம் லெப்ரே என்கிற கிருமியால் தொழுநோய் வருகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அரசு மருத்துவமனைகளில் தொழுநோய்க்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை இலவசமாக கிடைக்கும். பொதுமக்கள் அனைவரும் உடல் நிலை குறைவு ஏற்படும்பட்சத்தில் தாங்களாகவே மருந்துகளை உட்கொள்வதை தவிர்த்து அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களை அணுகி உரிய சிகிச்சை மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 126 தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வீட்டிலோ அல்லது சுற்றத்தில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைக்காமல் அவர்களை அரவணைத்து பாதுகாத்து உரிய சிகிச்சைகள் வழங்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

மேலும், 2 பயனாளிகளுக்கு தொழுநோய் பாதித்து கை, கால் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அரசு உதவித்தொகை ரூ.8,000 வீதம் ரூ.16 ஆயிரத்திற்கான இரண்டு காசோலைகளையும் கால், பாதிப்பு அடைந்து நடக்க இயலாமல் தொழுநோய் பாதிப்பு ஏற்பட்டவருக்கு ஊன்றுகோல்கள் (கிரட்சஸ்) ஆகிய உபகரணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், பொன்னேரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 500-க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் சேர்ந்து “ ஸ்பர்ஷ் ” தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) மரு.பி.வி.தயாளன், துணை இயக்குநர் (மருத்துவப்பணிகள் தொழுநோய்) மரு.கனிமொழி, பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் திரு.வே.முத்துசாமி, பொன்னேரி வட்டாட்சியர் திருமதி.ஜே.சுமதி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.ராஜேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர், பள்ளி தலைமை ஆசிரியர், மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**